தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

10. அறிவிப்புகள்

(அ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

9. சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) Is there any point of order? சட்ட முன்வடிவிலேயா?

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த சட்ட முன்வடிவு இருக்கிறதே அது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. அதைப் போலவே விற்பனை வரியைப் பற்றிய சட்ட முன்வடிவுகள் இங்கே வருகின்றன. இவ்வளவு முக்கியமானவைகள் எல்லாம் நேற்று இரவு 9½ மணிக்கு எங்களுக்குக் கிடைக்கின்றன. நாங்கள் அதைப் புரட்டிக்கூட பார்க்க முடியவில்லை. மிகச் சீர்திருத்தமான சில கருத்துக்களை கொண்டுவருவதாக இருந்தாலும் கூட அதிலே சாதக பாதகம் இருக்கிறதா என்று எங்களுக்குத் தெரியவில்லை என்று சொன்னால் கூட தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதற்குக்கூட காலம் இல்லாமல் இருக்கிறது. நேற்று 9½ மணிக்கு இவைகள் எங்களுடைய அறைகளிலே அல்லது எங்களுடைய வீடுகளிலே போடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு பார்த்தால் நிறைய செய்திகள் அடங்கிய இவைகளை எல்லாம் படிப்பதற்குக் கூட, படித்து சிந்திப்பதற்குக் கூட எங்களுக்கு வாய்ப்பு இல்லை. உதாரணமாகச் சொல்லப் போனால் இப்போது நமது மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பது மிகப் புரட்சிகரமான திட்டம்தான். எப்போது விதைக்கப்பட்டதாக இருந்தாலும் அது விருட்சகமாக வருவதிலே நாங்கள் மகிழ்ச்சி